**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை—6**

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரியம் **23.06.2019** அன்று கணினி ஆசிரியர் நிலை—**1** (முதுகலை ஆசிரியர்)க்கு கணினி வழியில் தேர்வினை தமிழகம் முழுவதும் **119** மையங்களில் நடத்தப்பட்டது. மேற்கண்ட கணினி வழித் தேர்விற்கு **30,833** தேர்வர்கள் விண்ணப்பித்திருந்தனர். ஆசிரியர் தேர்வு வாரியம் முதன்முறையாக கணினி வழியில் இத்தேர்வை நடத்தியது. பெரும்பாலான மையங்களில் எந்தவித இடர்பாடும் இன்றி இத்தேர்வு நடைபெற்றது. எனினும், ஒருசில மையங்களில் ஓரிரு ஆய்வகத்தில் கணினி தொழில்நுட்ப கோளாறு காரணங்களால் (Technical Problem) சில தேர்வர்கள் தேர்வு எழுத இயலாத நிலை ஏற்பட்டது. எனவே, தேர்வு மையத்திற்கு வருகைபுரிந்து, கணினி தொழில்நுட்ப கோளாறு காரணங்களால் (Technical Problem) தேர்வில் பங்குகொள்ளாதவர்களுக்கும், தேர்வினை முழுமையாக நிறைவு செய்யாதவர்களுக்கும் வேறு ஒரு நாளில் தேர்வு நடத்தப்படும். எனவே, இத்தேர்வர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அச்சப்படத் தேவையில்லை என்பதை ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துக்கொள்கிறது. தேர்வு நடைபெறும் நாள் மற்றும் மையங்கள் சார்ந்த விவரங்கள் தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி/மின்னஞ்சல் வாயிலாக ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் விரைவில் தகவல்கள் வழங்கப்படும். மேலும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தேர்வு மைய விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்திலும் வெளியிடப்படும்.

நாள் **23.06.2019**

**தலைவர்**